# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2020.10.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## தொழிற்சாலைகள் (திருத்தம்)

**(128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*தொழில் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்குவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இளம் ஆளொருவர் ஒருநாளில் வேலை செய்யக்கூடிய மணித்தியாலங்களின் தெரிவை விரிவாக்குவதற்குமாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது இளம் ஆட்களின் வயதின் மீள்கூறலைத் தவிர்ப்பதற்குமாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைத் திருத்துவதுடன், 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவை நீக்குகின்றது.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியைத் திருத்துவதுடன், 3 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையினதானதுமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ''இளம் ஆள்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை பதினாறு வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடையிலுள்ள வயதாக மாற்றுவதற்குமாகும்.

ச.வ. - ஓ. 35/2018

## (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (128 ஆம் அத்தியாயமான) தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *128 ஆம் அத்தியாயத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(ஆ) இளம் ஆட்களின் விடயத்தில், ஊழியக்காலப் பகுதி ஏதேனும் நாளில் பன்னிரண்டு மணித்தியாலங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதுடன், மு.ப. 6 மணிக்கு முன்னர் தொடங்குவதாகவோ பி.ப. 8 மணிக்குப் பின்னர் முடிவடைவதாகவோ இருத்தலாகாது; அத்துடன் வாரத்தில் ஒரு நாளில் ஊழியக் காலப்பகுதி பி.ப. 1 மணியுடன் முடிவடைதல் வேண்டும்;".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68(1) ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 68 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "பதினாறு வயதை அடைந்துள்ள ஆனால் பதினெட்டு வயதை அடைந்திராத" என்னும் சொற்களை நீக்குவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "பதினாறு வயதை அடைந்துள்ள ஆனால் பதினெட்டு வயதை அடைந்திராத" என்னும் சொற்களை நீக்குவதன் மூலமும்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71(1) ஆம் பிரிவு, அப்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "பதினாறு வயதை அடைந்துள்ள" என்னும் சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 77 ஆம் பிரிவை நீக்குதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியில் "அத்துடன் இளம் ஆட்களுக்கான குறிப்பீடுகள் பதினெட்டு வயதை அடைந்திராத எல்லா ஆட்களுக்குமான குறிப்பீடுகளை உள்ளடக்குகின்றன என்றாற்போன்ற" என்னும் சொற்களை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "இளம் ஆள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 ஆம் பிரிவைத் திருத்துதல்.

> " "இளம் ஆள்" என்பது, பதினாறு வயதை அடைந்துள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.".

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.